# அறுவை மூலமான மகப்பேற்றை அடுத்து ஏற்படக்கூடிய நிலைமை

**அறுவை இடம்பெற்றதை அடுத்து**

- பாவித்த மருந்துகள் உங்களைத் தள்ளாடச் செய்யலாம்
- உங்களுக்கு நடுக்கமும் விறைப்பும் ஏற்படலாம் (வெதுவெதுப்பான கம்பளி கொண்டு உங்களைப் போர்த்துவார்கள்)
- குழந்தை பிறந்தவுடன் நீங்கள் அதனைப் பார்க்கலாம், எடுக்கலாம்
- கூடிய சீக்கிரம் குழந்தைக்குப் பாலூட்டுவதற்கு உதவி நாடவும்

**அடுத்த நாள்**

- உங்கள் நோவைத் தணித்து சுகத்தைக் கொடுக்கும் மருந்தைத் தர முன்வருவார்கள்
- கூடிய சீக்கிரம் எழுந்து நடக்கும்படி உங்களைத் தூண்டுவார்கள்
- எத்தனை தடவைகள் இயலுமோ அத்தனை தடவைகள் குழந்தைக்குப் பாலூட்டிப் பராமரிக்கும்படி தூண்டுவார்கள்.
- நீங்கள் வாய்வு விடக்கூடிய நிலை வரும்வரை உங்களுக்குத் திரவ உணவு அல்லது மென் உணவு தர முன்வருவார்கள்
- வெட்டு வாய்க்குப் பற்றுப் போடுவார்கள். அதில் ஈரமோ அழுக்கோ படிதலாகாது

**வழக்கம்**

- வெட்டுவாயை மூடிப் போடும் இழைகள் அல்லது தைப்புமுட்கள் அறுவை முடிந்து 3-5 நாட்களுள் அகற்றப்படும்
- அறுவை முடிந்து 2-4 நாட்களுள் தாய் வீடு திரும்புவது வழக்கம்
- வீட்டில் நீங்கள் குளிக்கலாம். குளித்த பிற்பாடு வெட்டுவாயில் பட்ட ஈரத்தை ஒற்றி எடுக்கவும்
- அறுவை முடிந்து 3-5 நாட்கள் நீங்கள் மலம் கழியாதிருக்க நேரலாம் (அதிக திரவம் உட்கொள்ளவும். குறிப்பாக உலர் முந்திரியும் (prune), பேரிச் சாறும் (pear juice) பெரிதும் உதவும்
- வெட்டுவாய் படிப்படியாக ஆறும். மெல்லிய சிவப்பு வடு ஒன்றே எஞ்சும்
- வெட்டுவாய் நோ அன்றாடம் குறையும். நடப்பதும் நகர்வதும் எளிதாகும்

**அவதானம்**

- வெட்டுவாய் சீர்கெடல் அல்லது திறத்தல்
- அடிவயிறு மிருதுவாக இருத்தல் அல்லது அதில் தொடும்பொழுது நோதல்
- காய்ச்சல் அடித்தல்
- யோனிக் குழாயிலிருந்து வடியும் இரத்தம் நாற்றம் வீசுதல்

**உங்கள் உடல் தேறிவருவது குறித்து நீங்கள் ஏதாவது கேட்டறிய அல்லது தெரிவிக்க விரும்பினால் உங்கள் தாதியையோ மருத்துவமாதையோ தாதித்தொழில் புரிபவரையோ சிகிச்சை நிலையத்தையோ குடும்ப மருத்துவரையோ மகப்பேற்று மருத்துவரையோ அழைக்கவும்.**

2007..May be photocopied with acknowledgement to the Multicultural Perinatal Network
c/o 416-338-7600 Toronto Public Health
Tamil translation of “What To Expect After A Caesarean Section”